தினத்தந்தி

புதுச்சேரி 21-1-2020

# Indira Gandhi National Centre for the Arts

Regional Centre, Puducherry

&

# Department of Anthropology

School of Social Sciences & International Studies

Pondicherry University

Cordially invite you to the

Special Lecture on

## The Prehistoric Cultural Practices in Sub-Saharan Africa and South India

By

**P.Rajeswaran**

Botswana-Southern Africa

Presiding by

Prof. **P.Moorthy**

Dean – School of Social Sciences, Pondicherry University

In the Presence of

Prof. **K.Rajan**

Dept. of History, Pondicherry University

**Venue : Seminar Hall, UMISARC – Centre for South Asian Studies, Pondicherry University**

**Date and Time : 22nd January, 2020 at 10 am to 12.30 pm**

**All are Invited**

**Dr. A.Chellaperumal**
Prof. & Head, Dept. of Anthropology,
Pondicherry University

**Dr. Gopal. J**
Regional Director
IGNCA, Regional Centre,
Puducherry

RSVP: 0413-2222280 / 9944273930 IGNCA, RCP

வெள்ளிக்கிழமை, 24 ஜனவரி 2020

# ஆப்பிரிக்க - தென்னிந்திய கலாசார ஒற்றுமை குறித்த கருத்தரங்கம்

**புதுச்சேரி, ஜன.23:** ஆப்பிரிக்க கண்டம், தென்னிந்தியா ஆகியவற்றுக்கு இடையிலான கலாசார ஒற்றுமை குறித்த கருத்தரங்கம் புதுச்சேரியில் புதன்கிழமை நடைபெற்றது.

மத்திய அரசு நிறுவனத்தின் புதுவை மண்டல இந்திரா காந்தி தேசிய கலை மையம், புதுவை மத்திய பல்கலைக்கழக மானுடவியல் துறை ஆகியவை இணைந்து 'துணை - சஹாரா ஆப்பிரிக்கா மற்றும் தென்னிந்தியாவில் உள்ள வரலாற்றுக்கு முந்தைய கலாசார நடைமுறைகள்' என்ற தலைப்பில் நடத்திய சிறப்புக் கருத்தரங்கம் புதுவை பல்கலைக்கழகத்தில் உள்ள தெற்கு ஆசிய ஆய்வு மைய கருத்தரங்க வளாகத்தில் நடைபெற்றது.

போட்ஸ்வானா நாட்டின் கலை ஆர்வலரும், மானுடவியல், மதம், இலக்கியங்களில் ஆய்வுகள் மேற்கொண்ட சிறந்த எழுத்தாளருமான ராஜேஸ்வரன் சிறப்புரை ஆற்றினார்.

இந்தக் கருத்தரங்கில் வரலாற்றுக்கு முன்பு ஆப்பிரிக்க கண்டத்தில் உள்ள கலை, கலாசார, பண்பாடு குறித்த நடைமுறைகளை தென்னிந்தியா கலை, பண்பாட்டுடன் தொடர்புபடுத்தி ஒற்றுமை, வேற்றுமைகளை எழுத்தாளர் ராஜேஸ்வரன் எடுத்துரைத்தார்.



கருத்தரங்கை குத்துவிளக்கேற்றி தொடக்கிவைத்த எழுத்தாளர் ராஜேஸ்வரன். உடன், புதுவை மத்திய பல்கலைக்கழகப் பேராசிரியர்கள்.

ஆப்பிரிக்க, தென்னிந்திய கலை, பண்பாடு நடைமுறைகள் எவ்வளவு சிறப்பு வாய்ந்தது என்பதையும், கலாசாரமும் பண்பாடும்தான் தென்னிந்தியாவின் சொத்து என்பதையும் உலக நாடுகளுக்கு எடுத்துரைக்கும் வகையில் இந்தக் கருத்தரங்கம் அமைந்திருந்தது.

இந்த அரங்கில் ஆப்பிரிக்க நாட்டு பழங்குடியினரின் கலைப்பொருள்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. கருத்தரங்கத்துக்கு பல்கலைக்கழக சமூகவியல் துறைத் தலைவர் பேராசிரியர் மூர்த்தி தலைமை வகித்தார். வரலாற்றுத் துறைப் பேராசிரியர் ராஜன் முன்னிலை வகித்தார். முன்னதாக மானுடவியல் துறைத் தலைவரும், பேராசிரியருமான செல்லபெருமாள் வரவேற்றார். இந்திரா காந்தி தேசிய கலை மையத்தின் மண்டல இயக்குநர் கோபால் நன்றி கூறினார்.

இந்திரா காந்தி தேசிய கலை மையத்தின் திட்ட உதவியாளர் ஓவியர் ராஜா ஏற்பாடுகளை செய்திருந்தார்.